



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | ஜனவரி 7, 2021 | புரட்சி 19 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


## ‘சரியான பெயர்’

“முருகா, இந்த சங்கிகளை அடக்க வர மாட்டாயா?” என்று உண்மையான சைவர்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள்.

“நீ இந்துவாக இருந்தால் மட்டும் போதாது; நீ விபூதியணிந்து சைவக் கோலம் பூண்டால் மட்டும் நாங்கள் மதிக்க மாட்டோம்; இந்த பக்தி கோலத்தோடு மோடிஜிக்கு ‘ஜே’ போட வேண்டும்; ஆர்.எஸ்.எஸ்.யை ஆதரிக்க வேண்டும்; தி.மு.க. ஒழிக என்று கூற வேண்டும்; அப்போதுதான் நீ இந்து; இல்லையேல் இந்து துரோகி” என்று சங்கிகள் பேசும்போது, உண்மை பக்தர்கள் வேறு என்னதான் செய்வார்கள்?

கலையரசி நடராசன், சைவத்தில் ஊறி நிற்பவர். நெற்றியில் விபூதி கோலத்துடன் காட்சியளிப்பவர். சைவம் – இந்து மதம் அல்ல என்று ஓங்கி முழங்குகிறார். என்னுடைய ‘தமிழ்’ மொழியோடு ‘இந்து’வையும் சமஸ்கிருதத்தையும் இணைக்கவே கூடாது என்கிறார். ஆரியத்துக்கும் தமிழனுக்கும் என்ன தொடர்பு என்று கேள்வி கேட்கிறார்.

கலையரசியைப் போல் எத்தனையோ சைவர்கள் – தமிழர் என்ற உணர்வோடு களத்துக்கு வந்துவிட்டார்கள். பெரியாரோடு மேடையைப் பகிர்ந்து கொண்ட குன்றக்குடி அடிகளார் – சைவர் தான். அவர் தான் பார்ப்பனியத்தை எதிர்த்தார். திரு.வி.க. – சைவர்தான். அவர் பெரியாரோடு சேர்ந்து திராவிட நாடு கேட்டார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சைவர் தான். அவர்தான் பெரியாரோடு வகுப்புரிமை கேட்டார். அந்த மரபில் இப்போது கலையரசிகளைப் போல் பல சைவர்கள் பார்ப்பன எதிர்ப்பைப் பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் சங்கிகள் பா.ஜ.க. வழியாக ஆரியத்தை நுழைக்கத் துடிக்கிறார்கள். அதைத் தடுக்கும் ஒரே சக்தி ஸ்டாலின் தலைமையில் வீறுநடை போடும் தி.மு.க. தான் என்று துணிவோடு முழங்குகிறார்கள்.

இந்து விரோதக் கட்சி என்ற முத்திரை குத்தி தி.மு.க.வை வீழ்த்த நினைத்தோமே! இங்கே பக்தியாளர்களே நமக்கு எதிரிகளாக வருகிறார்களே என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கிறது ஆரியம்.

சென்னையில் அனைத்து மதத்தினரையும் ஒன்றிணைக்கும் விழாவுக்கு மு.க. ஸ்டாலினை சிறப்பு விருந்தினராக கிறிஸ்துவர்கள் அழைத்திருந்தனர். அதில் அம்மையார் கலையரசி சைவக் கோலத்துடன் ஆரிய எதிர்ப்பை முழங்கிய காட்சி சங்கிகளை தூங்க விடவில்லை.

மதன் ரவிச்சந்திரன் என்ற ஒரு பா.ஜ.க. ஆசாமி, கலையரசியை பேட்டி காண அவர் வீட்டுக்குப் போயிருக்கிறார். முன் அனுமதியும் கேட்கவில்லை. தான் நடத்தி வரும் ‘மதன் டைரி’ என்ற வலைக்காட்சி (யு.டியூப்) பெயரை மறைத்துக் கொண்டார். ‘சமூக நீதி சேனல்’ என்று பொய் சொல்லியிருக்கிறார். ‘கலையரசி ஒரு தி.மு.க. ஆதரவாளர்; சைவர் அல்ல’ என்று நிரூபிக்க மடக்கி மடக்கி கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

தி.மு.க.வை இந்து விரோத கட்சி என்பார்கள். அதே நேரத்தில் கடவுள் நம்பிக்கையாளர்கள் தி.மு.க.வை ஆதரித்தால் அவர்களை பக்தர்களாக ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். என்னப்பா, இது கதை?

இந்த ஆசாமிக்கு கலையரசி, சரியான பெயரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்; ‘அயோக்கியர்கள்’. சரியான பெயர் தான்!

**– கோடங்குடி மாரிமுத்து**

## கழகத்தின் தலைமைக் குழு முடிவுகள்

# தமிழ்நாட்டை வட நாடாக்கும் பா.ஜ.க. சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும்

தமிழ்நாட்டை உ.பி., ம.பி., இராஜஸ்தான் போன்ற மற்றொரு மாநிலமாக்க பா.ஜ.க. சூழ்ச்சிகரமான திட்டங்களை தேர்தல் களத்தில் உருவாக்கி வருவதை கழகத் தலைமைக் குழு கவலையுடன் பரிசீலித்தது. உள்ளூர் மட்டத்தில் மக்களை நேரடியாக சந்தித்தும் துண்டறிக்கை வெளியீடுகள் வழியாக கருத்துகளைப் பரப்புவதுமான பரப்புரைத் திட்டங்களை வகுப்பது குறித்தும் தலைமைக்குழு பரிசீலித்தது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழக தலைமைக் குழுக்கூட்டம் 03.01.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு மேட்டுப்பாளையம் ஈஸ்வரி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

இயக்கத்தின் ஏடுகள், போராட்ட திட்டங்கள், அரசியல் நிலவரங்கள், துணை அமைப்புகளின் செயல்பாடுகள், மாவட்ட நிர்வாக அமைப்புகளில மாறுதல்கள், கழகத் தோழர்களை சந்திக்கும் நிகழ்வுகள், சமூக வலைத் தளங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டது.

1) கொரோனா ஊரடங்கு காலகட்டத்தின் காரணமாக வேறு வழியின்றி இடைநிறுத்தம் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும், தற்சமயம் மீண்டும் வார இதழ் வெளிவந்துள்ள நிலையில் பெரியார் முழக்கம் ஏட்டுக்கு சந்தா சேர்க்கும் பணி குறித்தும் விவாதிக்கப்பட்டது.

   ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டிற்கென நன்கொடை வழியாக நிதித் திரட்டவும் இந்தப் பணியை உடனடியாகத் தொடங்கவும் முடிவெடுக்கப் பட்டது.

   அதேபோல் கொரோனா ஊரடங்கினால் வெளிக் கொணர இயலாமல் போன ‘நிமிர்வோம்’ மாத இதழை மீண்டும் வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சியையும், அதற்கான சந்தா சேகரிப்பு, நன்கொடை பெறுவது பற்றியும் தலைமைக் குழு விவாதித்தது.

2) எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல், மற்ற தேர்தலைப் போல் அல்லாமல் தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்றிட திராவிட இயக்கத்தை, குறிப்பாக தி.மு.க.வை வீழ்த்தும் ஒரே நோக்கத்தோடு பா.ஜ.க. பார்ப்பனிய சக்திகள் தீவிர முனைப்பு காட்டி வருவதையும் பெரியார் இயக்கங்களை முற்றிலுமாக முடக்குவதே அதன் முதன்மையான நோக்கமாக இருப்பதையும் பலரும் சுட்டிக்காட்டினர். இந்த நிலையில் பா.ஜ.க.வின் பார்ப்பன வியூகங்களுக்கு எதிராக மக்களை நேரடியாக சந்தித்துப் பேசவும் துண்டறிக்கைகள் வெளியீடுகள் வழங்கவும் ஆலோசிக்கப்பட்டது.

3) கழகத்தின் உள் கட்டமைப்பில் மாறுதல்கள் செய்வது, கழக மாவட்ட பொறுப்பாளர்களின் பணிகள் மேலும் சிறப்புற பொறுப்புக்களை மாற்றி அமைப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டது. கழகத்தின் துணை அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சிறப்பான செயல்பாடுகளுக்கு தலைமைக்குழு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தது. மாணவர் கழகத்தின் செயல்பாடுகளை மேலும் செழுமைப் படுத்த பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் செயல் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

4) கழக அமைப்புகளில் இளைஞர்களுக்கு மேலும் பொறுப்புகளை வழங்கி இயக்க செயல்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு நகர்த்த வேண்டிய அவசியம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. மாநில அளவில் கழகத் தோழர்களை பல்வேறு மாவட்டங்களில் கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர், கழக நிர்வாகிள் சந்தித்து உரையாடுவது பற்றி விவாதிக்கப்பட்டது.

5) கழகத் தோழர்களின் கடும் உழைப்பாலும், கழக ஆதரவாளர்களின் பெரும் உதவியோடும் வழங்கப் பட்ட கட்டிட நிதியால் கழகத்தின் தலைமைக்கழக கட்டிடம் சாத்தியப்பட்டது. நிதி அளித்தோரின் பெயர்கள் கழகத்தின் வார ஏட்டில் நன்றியோடு பகிரப்பட்டு வந்தது. கொரோனா ஏற்படுத்திய இடைவெளியால் நிதி அளித்தவர்கள் பெயர்ப் பட்டியலை முழுமையாக வெளியிட இயலாமல் போனதையும், மீண்டும் வெளி வந்துள்ள பெரியார் முழக்கத்தில் விடுபட்ட ஆதரவாளர்கள் பெயரையும் பதிவு செய்வது எனவும் நன்றி அறிவிப்பு கடிதங்களை எழுதவும் முடிவு செய்யப்பட்டது.

தலைமைக் குழுக் கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், முகநூல் பொறுப்பாளர் பரிமளராஜன், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, மயிலாடுதுறை இளையராஜா, அய்யனார், மடத்துக்குளம் மோகன், சூலூர் பன்னீர் செல்வம், மேட்டூர் சக்தி, காவலாண்டியூர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ‘கொரானா’ இடைவெளிக்குப் பிறகு தோழர்களின் முதல் சந்திப்பு

# மேட்டுப்பாளையத்தில் நடந்த இரு நாள் பயிற்சி முகாம்

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், பெரியாரியல் பயிலரங்கம் மேட்டுப்பாளையம், பேருந்து நிலையம் அருகில் ஈஸ்வரி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 03.01.2021 ஞாயிறு, 04.01.2021திங்கள் ஆகிய இரண்டு நாட்கள் நடந்த இப்பயிலரங்கில், முதல் நிகழ்வாக தோழர்கள் சுய அறிமுகத்துடன் பயிலரங்கில் கலந்து கொள்ளும் புதிய தோழர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து பெண் தோழர்கள் கொள்கைப் பாடல்களைப் பாடினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பயிலரங்கின் அவசியம் குறித்தும் பெரியாரியலை, ‘வாழ்க்கை-சமூகம்-மாற்றம்’ என்ற மூன்று தளங்களில் பொருத்திப் பார்க்க வேண்டும் என்றும் விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து, திராவிடர் விடுதலைக் கழகத்தின் “செயல்பாடுகள், கட்டுப்பாட்டு நெறி முறைகள்” ஆகியவை குறித்து பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் உரையாற்றினர். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, இணையதள செயல்பாடுகள் குறித்து இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் உரையாற்றினார்.



இரண்டாம் நிகழ்வாக ‘பெரியாரின் மொழிக் கொள்கை’ எனும் தலைப்பில் தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன், நிறைவாக “பெரியாரும் பெண்ணுரிமையும்”

(2ஆம் பக்கம்)

# தமிழர்கள் இந்துக்கள் அல்ல

# சைவ நெறியாளர் கலையரசியின் ஆரிய எதிர்ப்பு முழக்கம்

*கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி, 'ஒன்றிணைக்கும் கிறிஸ்துமஸ்' என்ற தலைப்பில் கிறிஸ்துவ மத நல்லிணக்க அமைப்பு சென்னையில் டிசம்பர் 20, 2021இல் ஒன்றை நடத்தியது. தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். விழாவில் இஸ்லாம், முஸ்லிம், சைவ மதப் பிரிவினர் பங்கேற்றுப் பேசினர். சைவ நெறியாளரும் பரப்புரையாளருமான கலையரசி நடராசர் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி.*

இந்து மதம் என்ற ஒன்றை, இங்கே பேசும் போது அருமை நண்பர் இனிகோ கூறினார். இந்து என்ற சொல்லையே குறிப்பிடாதீர்கள். அது உருவாகி 200 ஆண்டுகள் தான் ஆகிறது. நாங்களெல்லாம் சைவர்கள். எப்படி, 'கல்தோன்றா மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய தமிழ்' என்னுடையது. என்னுடையது என்று கூறியதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன். இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி கிருத்துவர்களாக இருந்தாலும் சரி தொப்புள்கொடி உறவுகள். அவர்கள் எங்களுடைய சகோதரர்கள். யார் என்ன செய்தாலும் நாங்கள் அவர்களை பிரிய மாட்டோம், எங்களையும் அவர்கள் பிரிய மாட்டார்கள். இனிகோ பேசும்போது இந்துக்கள் என்று குறிப்பிட்டார். இந்துக்கள் என்று குறிப்பிட வேண்டாம்; தமிழரென்றே குறிப்பிடலாம். தமிழர்களில் ஒரு பிரிவினராக நாங்கள் இருக்கிறோம் வேறொரு பிரிவினராக நீங்கள் இருக்கிறீர்கள். இதுபோன்ற மாநாடுகளில் இந்து என்ற வார்த்தையை பயன்படுத்துவதே நமக்கு பலவீனம். அப்படி ஒரு மதமே கிடையாது.

தமிழன் யார்?

"ஓங்கல் இடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருள் அகற்றும்
- ஆங் கவற்றுள்
மின்னேர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது
தன் நேர் இலாத தமிழ்"

தமிழனும் அவ்வாறே. இந்தத் தமிழனுக்கு நிகர் உலகிலே எவரும் கிடையாது. மாயைக்கு உட்பட்டு போனதால் தமிழனின் எதிர்காலம் வருத்தத்திற்குரியதாகவும், அச்சத்திற்குரியதாகவும் இருக்கிறது.



கடந்த 18ஆம் நூற்றாண்டுகளிலே இந்தத் தமிழை முழு மையாக அழித்துவிடலாம் என்கிற எண்ணத்தில் அழிவின் விளிம்பில் கொண்டு நிறுத்தியவர்கள் இந்த ஆரிய மாபாவிகள். ஆரியர்களுக்கு எதையும் அழிப்பது என்றால் ஆனந்தம், ஆனந்தம், பேரானந்தம். அந்த வகையில் தான் இன்று இந்திய ஒன்றியத்தின் தேசிய இனங்களின், மொழி, பண்பாடு, பொருளாதாரம், வாழ்வாதாரம் ஆகிய அனைத்தையும் அழித்து அடிமைப்படுத்த வேண்டும் என்பதே இவர்களுடைய நோக்கம். மனிதர்கள் அடிமையாகவில்லை என்றால் அந்த மனிதர்களை அழித்துவிடுவார்கள். இதுதான் அவர்கள் வழக்கமாக கையாளுகின்ற முறை. அந்த வகையில் தான் மலைகள் சூழ்ந்த ஜார்கண்ட் மாநிலத்தை அதானிக்குத் தாரை வார்ப்பதற்காக அந்த மண்ணின் மக்களை ஏழை எளியவர்களை இவர்கள் படுத்துகின்ற பாடு, செய்கின்ற கொடுமைகள் ஏராளம். அந்த ஏழை மக்களை ஆதரித்து இந்த அநியாயங்களை எதிர்த்து குரல் கொடுத்தார் என் பதற்காக, தமிழகத்தை சேர்ந்த திருச்சி மாவட்டத்தை சார்ந்த 'ஸ்டேன் சுவாமிகள்' என்கிற தமிழ் கிருத்துவ பாதிரியார்; தமிழர். அவருக்கு வயது 84. அவர் ஒரு கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவரை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆன்மிகத்தைப் பற்றி பேச தகுதி இருக்கிறதா? அன்பை பற்றி பேசலாமா? கருணை என்றால் என்னவென்று தெரியுமா? மிகவும் கொடியவர்கள்; ஆரியர்கள் மிகவும் கொடியவர்கள். தமிழகத்தில் தமிழ் மொழியை அழித்துவிட்டால் தமிழனை அழித்து விடலாம் என்பது இவர்களுடைய எண்ணம். அந்த வகையில் 18ஆம் நூற்றாண்டில் தமிழ்ச் சொற்களில் உள்ள 50 விழுக்காடு சொற்களை பிடுங்கி எறிந்து, 50 விழுக்காடு சமஸ்கிருத சொற்களை சேர்த்து தமிழ் மொழி என்கிற அந்த பெயரையே மறைத்து 'மணிப்பிரவாளம்' என்று புதிய பெயரை சூட்டினார்கள். அந்த கால கட்டத்தில் பல தமிழ் அறிஞர்கள் இந்த மண்ணில் தோன்றினார்கள். அப்படித் தோன்றியவர்களெல்லாம் தமிழ்த்தாயின் புதல்வர்கள். தமிழைக் காக்க கடமைப்பட்டவர்கள். ஆனால் இந்த ஆரியப் பாவிகளால் அந்நியர்கள் என்று கைகாட்டப்பட்ட சீகன் பால் கு, பெஸ்கி எனும் வீரமா முனிவர், எல்லீஸ், ஜி.யு.போப், டாக்டர் வின்ஸ்லோ, டாக்டர் கால்டுவெல் போன்ற கிருத்துவ பெருமக்கள் தமிழகத்தில் மறைக்கப்பட்ட பல எழுத்துக்களை, பல அறிவுச் செல்வங்களை நமக்கு மீட்டெடுத்து கொடுத்தார்கள். அப்படி அவர்கள் செய்திருக்கவில்லையென்றால், இந்த தமிழ்நாட்டின் பல எழுத்துச் செல்வங்கள் நமக்கு கிடைக்காமலேயே சென்றிருக்கும்.

**உ.வே.சா.வும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும்**

தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் அவர் செய்த பணிகளை மட்டுமே பேசுவார்கள். அந்த தமிழ் தாத்தாவிற்கு தமிழைக் கொடுத்தவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவரை நினைவுகூர மாட்டார்கள். அந்த தமிழ் தாத்தாவிற்கு உணவை வழங்கியது, தமிழ் மக்களின் உழைப்பில் விளைந்த திருவாடுதுறை ஆதீனம். இப்படி தமிழர்களின் உழைப்பு, தமிழர்களின் செல்வம், தமிழர்களின் ஆதரவைக் கொண்டு தலையெடுப்பார்கள் பிறகு ஆடிட்டர் குருமூர்த்தி போன்று தமிழ் நீஷ பாஷை என்று தமிழர்களை உட்கார வைத்துக்கொண்டு தமிழில் கூறுவார்கள். தமிழர்களும் கேட்டுக் கொண்டிருப் பார்கள். நம்மை உட்காரவைத்துக் கொண்டே ஒருவன் தமிழை நீஷ பாஷை என்று கூறுகிறான் என்றால் அவனை விட்டுவிடுவதா ? அந்த உணர்வும், வீரமும் எங்கே சென்றது தமிழனுக்கு ? இந்த தமிழன் ஏன் இப்படி ஆனான் ? சினிமா தான் காரணம். என்னைப் பொறுத்தவரை நான் அப்படித்தான் நினைக்கிறேன். இந்த சினிமா கவர்ச்சியினால், இன்று யார் யாரோ வந்து உரிமை என்கிறார்கள், போருக்குத் தயாராகு!

ஆன்மீக அரசியல் என்கிறார்கள். என்ன ஆன்மீக அரசியல்? எங்களுக்குத் தெரியாத ஆன்மீக அரசியலா? சமஸ்கிருதத்தில், 'உபன்னா திராவிடம், பக்தி விருத்தம் கர்நாடகம், பிரளையம் கூர்ச்சவம்' என்று ஒரு சொற்றொடர் உள்ளது. திராவிடம் என்று கூறினால் தமிழகம் என்று பொருள். உபன்னா திராவிடம் என்பது என்னவெனறால்? பக்தி தமிழகத்திலே உருவானது என்று பொருள் படும். ஆரியத்துக்கும் தமிழனுக்கும் என்ன தொடர்பு? ஆன்மீகம், பக்தியை பற்றி ஆரியர்களுக்கு என்ன தெரியும் ? அடுத்து பக்தி விருத்தியாம் கர்நாடகம், கர்நாடகத்தில் பக்தி வளர்ந்தது என்று பொருள். பிரளையம் தூர்ச்சரம் என்றால் குஜராத்தில் அழிந்தது என்று பொருள். குஜராத்தில் இருந்து யாராவது வந்தால் அனைத்தையும் அழித்துவிடுவார்கள் என்று அர்த்தம். இது சமஸ்கிருத சொற்றொடர். எனக்கு சமஸ்கிருதம் தெரியாது; அதை பார்த்தாலும் வாசிப்பது இல்லை. இவ்வளவு காலமாக அவர்கள் கூறிய கதைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தோம் இனி கேட்கமாட்டோம். தற்போது இந்து என்ற வார்த்தையை கேட்டாலே உடலெல்லாம் எரிகிறது; என்கிறபோது இந்து சம்மந்தப்பட்ட கதைகளை கேட்டாலும் பிடிக்கவில்லை. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும். சங்க இலக்கியங்களை படியுங்கள். திருமறை தான் நமது உயிரைக் காப்பாற்றுகின்ற நூல்.

இங்கே ஆட்சிக்கு வரக்கூடிய தகுதி யார் யாருக்கோ இருப்பதாக கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால் சைவர்களாகிய, தமிழர்களாகிய எங்களுடைய எண்ணம், எங்களுடைய கனவு இந்த தமிழகத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் கலைஞருடைய புதல்வராகிய மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தான் இருப்பதாக நான் எண்ணுகின்றேன். நான் பல இடங்களில் பேசிப் பார்த்ததில் அப்படித்தான் ஒரு முடிவை கூறுகிறார்கள். அவர் மேயராக, துணை முதல்வராக, செயல்தலைவராக இப்படி பல பொறுப்புகளிலிருந்து பணியாற்றி ஆட்சி அனுபவம் பெற்றவர். அந்த ஆட்சி அனுபவம் பெற்றவரிடம் இந்தத் தமிழகம் மிக மிக எதிர்பார்க்கிறது. தமிழ் மக்கள் அவரிடம் மிகுந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக நாளைய முதல்வர் அவர்தான், அதில் அய்யமில்லை.

(குறிப்பு: இந்த உரை, பார்ப்பனர்களை எரிச்சல் அடையச் செய்தது. அதன் காரணமாக மதன் ரவிச்சந்திரன் என்ற பா.ஜ.க. பேர்வழி அம்மையார் அனுமதி பெறாமல் திடீரென்று வீட்டிற்குச் சென்று தனது அடையாளத்தை மறைத்து பேட்டி ஒன்றை எடுத்துள்ளார். இது அயோக்கியத்தனம் என்று அம்மையார் கலையரசி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.)

முதல் பக்கத் தொடர்ச்சி

எனும் தலைப்பில் கோவை மாவட்டச் செயலாளர் வெள்ளியங்கிரி வகுப்புகளை எடுத்தனர். பிறகு பயிலரங்கில் கலந்து கொண்ட புதிய தோழர்கள் பயிலரங்கம் குறித்த தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். தோழர்கள் பங்கேற்ற பட்டிமன்றம் நடந்தது. விளையாட்டு நிகழ்வுகளில் பயிற்சியாளர்கள் பங்கேற்றனர். முதல் நாள் நிகழ்வுகள் மாலை 6.00 அளவில் நிறைவுற்றது.

இரண்டாம் நாள் 4.1.2021 அன்று முதல் வகுப்பாக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'மதமும் அரசியலும்' என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார். மதம் கட்டமைத்த சடங்குகளை எதிர்த்தே மனித சமூகம் முன்னேறி வந்துள்ளதை சுட்டிக் காட்டி, ஜாதி ஆதரவு - பெண்ணுரிமை மறுப்பு - மாநிலங்களை ஒழித்தல் - சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக்குதல் ஆரிய இனமே உயர்வானது என்பதே ஆர்.எஸ்.எஸ். அடிப்படை இலட்சியம் என்பதை ஆர்.எஸ்.எஸ். தத்துவ நூலான கோல்வாக்கர் எழுதிய 'பஞ்ச் ஆப்தாக்ட்ஸ்' நூலிலிருந்து எடுத்துக்காட்டி விளக்கினார். தொடர்ந்து பயிற்சியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்தார்.


நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'இடஒதுக்கீடு வரலாறு' தலைப்பில் பிரிட்டிஷ் ஆட்சி, நீதிக் கட்சி ஆட்சி, காங்கிரஸ்-தி.மு.க.-அ.தி.மு.க. ஆட்சி காலங்களில் இடஒதுக்கீடு அமுலாக்கப்பட்ட வரலாறுகளை விரிவாக எடுத்துரைத்தார். மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீட்டை வி.பி. சிங் கொண்டு வந்தார். பிறகு 2006இல் கல்வியில் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கொண்டு வந்தது. அதை செயல்பட விடாமல் முடக்க நீதித் துறை பார்ப்பன அதிகார வர்க்கம் செய்த சதிகள் 'நீட்' தேர்வின் பாதிப்புகள் குறித்து விரிவாக விளக்கி வகுப்பு எடுத்தார். பின்னர் தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்தார். 65 பேர் பயிற்சியில் பங்கேற்றார்கள்.

இரண்டு நாள் பயிற்சி முகாமையும் தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் ஒருங்கிணைத்தார். நீண்ட கொரானா இடைவெளிக்குப் பிறகு கழகத் தோழர்களின் நேரடியான முதல் சந்திப்பாக இந்தப் பயிற்சி முகாம் அமைந்திருந்தது. கோவை, திருப்பூர் மாவட்டக் கழகம் இணைந்து இந்த முகாமை நடத்தின.

**– நமது செய்தியாளர்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 07.01.2021**

## இலட்சியமற்ற வாழ்க்கை



*"பிறப்பும் இறப்பும் இயற்கையே; மனிதன் ஏன் பிறக்கிறான் என்று யாராவது கூற முடியுமா? பிறந்து எதற்காக வாழ்கிறான்; எதற்காக இறந்து போகிறான் என்று யார் கூற முடியும்? இதைக் கேட்டால் அது கடவுள் செயல்; கடவுள் பிறப்பிக்கிறார்; கடவுள் காப்பாற்றுகிறார்; சாகடிக்கிறார் என்று தான் கூற முடியுமே தவிர வேறு சரியான காரணம் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின் மீது தனக்குப் பிள்ளை வேண்டுமென்று பிள்ளையைப் பெறுகிறான் என்றால், எதற்காகப் பிள்ளை வேண்டும் என்பதைக் கூற முடியுமா?*

*அவனைக் கேட்டால் கூடத் தெரியாது. குழந்தையை அடைந்ததும் அதை ஏன் காப்பாற்ற வேண்டும்; அதற்கு ஏன் கல்வி புகட்ட வேண்டும் என்ற இலட்சியத்தைக் கூற முடியாது. ஏதோ தம் பிள்ளை படிக்க வேண்டும் என்பார்களே தவிர, எதற்காகக் கல்வி கற்க வேண்டும் என்றே தெரியாது... இவ்விதமே எல்லாம் ஒரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் இருக்கின்றன.*

*வாழ்க்கை என்ற ஏணிப்படியில் கால் வைக்கும்போது நாம் எங்கே ஏறுகிறோம்; கடைசியாக எங்கே போவோம் என அறியக்கூடவில்லை. நாம் ஏறி முடிந்தால் போதும் என்பதைக் கொண்டிராமல், ஒவ்வொரு படியாக ஏறிக் கொண்டே போக வேண்டும்; அதைப் பிடித்தவுடன் அதற்கு மேல் என்ன தெரிகிறதோ, அதைப் பிடிக்க வேண்டும் என்று எல்லையே இல்லாமல் இலட்சியமற்ற முறையிலேயே காலத்தைக் கடத்துகிறோம். இறுதியில் காலம் முடிவடைந்து இறந்து போகிறோம். இப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் ஒருவிதப் பலனும் கிடையாது."*

**– பெரியார்**

# பேராசிரியர் கருணானந்தம் விளக்குகிறார் (3)

# ராகுல சாங்கிருத்தியாயன் இரட்டை வேடம்

# ஆரியர்கள் பெண்களிடம் கருணை காட்டினார்களா?

*ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற புதினம் ஆரியர்களை உயர்த்திப் பேசுகிறது. அதை வைத்து தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் தருகிறார் பேராசிரியர் கருணானந்தம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

'ரிக் வேத கால ஆரியர்கள்' என்ற நூலில், அசுரர்களிடத்தில் போர் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பாரன், விருத்தினன், நமூஷி போன்ற பல அசுர மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அசுரர்கள் எப்படி கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. நூலின் ஓரிடத்தில், "திவோதஸ் என்ற மன்னன் சம்பாரன் என்ற அசுர மன்னனுடன் 40 ஆண்டுகால போரில் ஈடுபடுகிறான். மிகக் கடுமையாக நடைபெற்ற போரின் இறுதியில் அந்த அசுர மன்னனை கொல்வதாக கூறப்பட்டுள்ளது. வெற்றி பெற முடியாததற்கு காரணம் என்னவென்றால், அவர்கள் (அசுரர்கள்) கோட்டையில் வசிப்பதாக கூறப்பட்டது. 'இந்தக் கோட்டையை நம்மால் தகர்க்க முடியாது இடியினால் தான் தகர்க்க முடியும்' எனவேதான் இடிக்கு கடவுளான இந்திரனின் ஆசியை அவர்கள் வேண்டுகிறார்கள். அதனால் தான் இந்திரனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எதற்காக இந்திரனுக்கு சிறப்பு ? இந்திரனின் ஆயுதம் 'வஜ்ராயுதம்'. வஜ்ராயுதம் என்றால் இடி. பிராமணர்களாகிய நாங்கள் கூறினால் இடி இடிக்கும், மின்னல் வரும். அந்த இடியில் கோட்டைகளெல்லாம் நொறுங்கிப் போய்விடும் என்றார்கள். தற்செயலாக நடைபெற்றதைக்கூட தங்களது மந்திரத்தால் நடைபெற்றவை என்று உரிமை கொண்டாடினார்கள். இந்த கோட்டைகளைக் கொண்டிருந்த சம்பாரனுடன் நடைபெற்ற போரைப் பற்றிக் கூறுகிறபோது, 'இந்த அசுர மன்னர்களின் படைகளில் (இராட்சஷர்கள்) பெண்களும் வாள் ஏந்தி போரிடுகிறார்கள்'. இங்கே கேள்வி கேட்டவரும் சரி, இராகுல சாங்கிருத்தியாயனும் சரி, பெண்ணடிமைத் தனம் அசுரர்களிடம் இருப்பதாக கவலைப்படு கிறார்கள். பெண்கள் போரில் பங்கெடுத்து மரணமடைந்தனர்; மரணமடைந்தார்கள் என்பதைவிட ஆரிய மன்னர்களால் கொல்லப்பட்டார்கள் என்பதே சரி.

ஆரியர்கள் பெண்களுக்கு கருணை காட்டியதாக ரிக் வேதத்தில் எந்த செய்தியும் கிடையாது. இல்லாத ஒன்றை கற்பனையின் மூலமாக நிலை நிறுத்த விரும்புகிறார்கள். சம்பாரனது மனைவியை ஆரியர்கள் கொன்ற செய்தியை ரிக் வேதமே குறிப்பிடுகிறது. போரில் பங்கெடுக்கும் அளவிற்கு பெண்கள் இருந்தார்கள் என்றால் அது பெண்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு அல்லவா ? அசுரர்களிடம் பெண்ணடிமைத்தனமும் வேசித் தொழிலும் மட்டுமே இருந்தன என்பது சரியானதா ? உலகிலேயே பழமையான தொழிலாக வேசித் தொழிலை கூறுவார்கள். அனைத்து நாகரிகத்திலும் வேசித் தொழில் இருந்தன. ஆனால் அந்த வேசித் தொழிலும் நாடோடி சமூகத்தில் இருக்க வாய்ப்பு இல்லை. அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தார்கள். ஏறக்குறைய இடம் பெயரக் கூடியவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அதிலும் நிறைய கணவர்களுக்கு ஒரே பெண் மனைவியாகக் கூடிய சூழ்நிலைகளும் இருந்தன. இது பரவாயில்லை என்று நினைக்கிறீர்களா ? இதற்கு வேசித் தொழில் என்று பெயர் இல்லையென்றாலும்கூட பெண்கள் விருப்பமில்லாமல் பல ஆண்களுக்கு இனங்கிபோதல் என்பது எந்தப் பண்பாடு ? அடிமை வணிகம் அசுரர்களிடமிருந்தது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதற்காக, இல்லவே இல்லை என்று நான் கூற வரவில்லை. ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பு அடிமைத்தனம் இருந்தது. "சில ஆரிய மன்னர்கள் போரில் வென்ற பிறகு, போரில் தோல்வியுற்றவர்களை அடிமைகளாக்கிக் கொண்டார்கள்" என்று ரிக் வேத கால ஆரியர்கள் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரிக் வேதத்தில் இறுதிப் பகுதியான 10 ஆவது மண்டலத்தைத் தவிர வேறு எந்த மண்டலத்திலும் சூத்திரன் கிடையாது. ஆனால் மற்ற மண்டலங்களில் வேறெப்படி குறிப்பிடப்பட்டுள்ளது ? இராட்சஷன், அசுரன், தஷ்யூ, கிருஷ்ணா , தாசா, யட்ஷா, கிராதா இவ்வாறு நிறைய ஆரியரல்லாத பிரிவுகள் குறிப்பிடப்படு கின்றன. சூத்திரன் என்ற பிரிவு எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. சூத்திரன் என்ற பெயர் வந்ததே, ரிக் வேத கால இறுதியில் அல்லது முடிந்த பிறகு. இங்கு தொழிற் பிரிவுகளாக இருந்தவர்கள், ஆரியர்கள் இங்கே நிலையானவர்களாக மாறிய பிறகு, ஆரியர்களுக்கு, தொழிற் பிரிவினர் கட்டாயமாக அவர்களது உழைப்பைத் தர வேண்டும். அப்படி உழைப்பைக் கொடுத்தவர்கள் இங்கே சூத்திரர்களாக்கப்பட்டார்கள். சூத்திரர்கள் ஆரியர்கள் அல்ல. பிராமணன், சத்ரியன், வைசியன் ஆகிய மூவரும் ஆரியர்களில் வருவார்கள். ஆனால் சூத்திரன் ஆரியன் அல்ல.



**உலக வரலாற்றிலேயே அன்று முதல் இன்று வரை ஒரு சிறு சமூகத்திலேயே புரோகிதம் நிலையாக இருப்பது இந்தியாவில் மட்டும் தான். வேறு எந்த நாட்டிலும் கிடையாது, வேறு எந்த மதத்திலும் கிடையாது.**

ஆரியர்கள் அனைவருமே பிராமணர்கள் அல்ல. பிராமணர்கள் அனைவரும் ஆரியர்களாக இருக்கலாம். பல தொழில்கள் தெரிந்தவர்கள், கட்டாயப்படுத்தி ஆரியர்களுக்கான உழைப்பாளிகளாக மாற்றப்பட்டவர்கள்தான் இந்த நான்காவது வர்ணமான சூத்திர வர்ணம். இந்த தகவலை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். ரொமிலா தாப்பர் எழுதிய 'From Lineage To State' என்ற நூல் தொன்மை கால ஆரிய வரலாறுகளை கூறுகிறது. அதில், ஆரியர்களுக்குள் உட்பிரிவுகள் என்பது மூன்று தான். அந்த ஆரிய சமூகம் என்பது 'விஷ்வம்' என்று குறிப்பிடப்படுகிறது. 'வைஷ்ய' என்பதின் மூலமே 'விஷ்' என்ற சொல் தான். விஷ் என்றால் அனைத்து சமூகமும் என்று பொருள். அந்த விஷ் - லிருந்து சிலர் புரோகிதர்களாக மாறுகிறார்கள். அல்லது அந்தத் திறமையைப் பெற்று புரோகித பணியை (யக்ஞங்களை) செய்கிறார்கள். படைகளை பாதுகாப்பதற்காக, ஆட்சி செய்வதற்காக 'ரஜன்னியர்கள்' என்ற சத்ரியர்கள் உருவானார்கள். இந்த மூன்று பிரிவு தான் ஆரிய பிரிவு. "கோடிக்கணக்கான, இலட்சக் கணக்கான எண்ணிக்கையில் அவர்கள் இங்கே வரவில்லை. சிறு சிறு குழுக்களாக பிரிந்து வாழ்ந்தார்கள். ஆரம்பகாலத்தில் 5 ஆரிய இனக்குழுக்கள் தான் வலிமை வாய்ந்தவைகளாக இருந்ததாக ரிக் வேதமே கூறுகிறது. அதில், புரு, துரு, திரிஷ்யா, துருவாசா, யாது ஆகிய குழுக்கள் தான் இருந்தது. இவர்களில் ஒரு குடியிருப்பென்றால் பத்து குடும்பங்கள் இருக்கும் அவை கூட்டுக்குடும்பம்; ஒரு ஆண் வழித் தலைமையிலான குடும்பம். இந்த பத்துக் குடும்ப அமைப்பு ஒரு கிராமமாக மாறுகிறது. பத்து கிராமங்கள் சேர்ந்தால் அதற்கு 'கோபா' என்று பெயர். பத்து கோபாக்கள் சேர்ந்தால் ஒரு 'இராஷ்டிரம்' ஆகிறது. பெரும்பாலும் கிராமத்திலேயே அடங்கிவிடுவார்கள். இந்த கிராமத்தின் தலைவன் கிராமைகா, கிராமனி. அங்கே இருந்த அந்த குடும்பங்களுக்கு தலைவன், குலாபா, குலபதி. இது தான் அவர்களின் உள்ளமைப்பு. இந்த சிறு அமைப்பை மட்டும் வைத்திருந்தவர்கள் சுதந்திரமான ஆட்சியை விரும்பினார்கள் என்று எப்படி கூறுகிறார்கள்? சிறு அமைப்பில் என்ன சுதந்திரம், அடிமைத்தனம்? அவர்களின் பொருளாதாரமே ஆடு மாடு மேய்த்தலை மையமாகக் கொண்டது தான். அது எப்படி உயர்ந்த அமைப்பாகும்? இந்த அமைப்பை மக்களாட்சி என்று 'வால்கா முதல் கங்கை வரை' நூலில் கூறுகிறார். ஆனால் அவரே எழுதிய வரலாற்று பதிவுகளான 'ரிக் வேத கால ஆரியர்கள்' நூலில் அப்படி குறிப்பிடவில்லை.

மக்களாட்சி என்றால் என்ன ? உதாரணத்திற்கு, இன்றும் மலைகளில் வசிக்கக்கூடிய மக்கள் அவர்களுக்குள் எதாவது பிரச்சனை என்றால் அங்கு வாழக்கூடிய பத்து குடும்பங்கள் ஒன்றாக அமர்ந்து பேசி தங்களது பிரச்சனைகளை தீர்த்துக் கொள்கிறார்கள். அதே போல ஆரியர்கள் துவக்க கட்டத்தில் தங்களின் பிரச்சினைகளை பேசி தீர்த்துக் கொள்வார்கள் ஆனால் காலப்போக்கில் பல பிரிவுகள் உருவாகி ஒரு நாகரிகம் தோன்றிய பிறகு அந்த அமைப்பு பயன்படாது. ரிக் வேத கால ஆரியர்கள் நூலிலே, சபாஷ், சமிதி என்ற இரண்டு அமைப்புகளை குறிப்பிடுகிறார். அரசனை தேர்ந்தெடுப்பார்கள்; தேர்ந்தெடுக்கப்பட்ட அரசனை இவர்கள் நினைத்தால் விலக்கலாம். அந்த அரசனை அனைத்து மக்களும் தேர்ந்தெடுக்கவில்லை. இவைகளுக்கெல்லாம் ஆதாரங்கள் இல்லை, அனுமானம் தான். சிறு அமைப்பில் அரசனுக்குப் பெயர் தந்தையாகவும் இருக்கலாம் அல்லது அரசனாகவுமே இருந்திருக்கலாம். சிறிய அமைப்பை வைத்துக்கொண்டு, ஒரு நகர நாகரீகத்தை அதாவது இமயமலை முதல் அரேபிய கடல் வரை இருந்த ஒரு நாகரிகத்துடன் எப்படி ஒப்பிடுகிறீர்கள் ? ஒரு பெரிய பிரிவை ஆள்வதற்கு இந்த அமைப்பு முறையே மாறும். நாடோடிகளாக இருக்கும் தான்தோன்றிகளிடம் இந்த அமைப்பு முறையை ஒப்பிடுவதே தவறு.

அசுரர்களை தாழ்வாக பார்ப்பது நியாயம்தானே என்ற வாதம் சரிதானா? அசுரர்களை தோற்கடிப்பதற்கு ஆரியர்கள் பல வழிகளை பயன்படுத்தினார்கள் என்பது தான் வரலாறு. புராணங்களே இதை வைத்துத்தானே எழுதப்பட்டது. மோகினி அவதாரம் எப்படி வந்தது ? பெண்களை அனுப்பி அசுரர்களை பிரித்தது யார் ? அசுரர்களுக்கும் புரோகிதர்களாக ஆரியர்கள் சென்றார்களே! அனைத்து நாகரிகத்திலும் புரோகிதம் உண்டு. உலக வரலாற்றிலேயே அன்று முதல் இன்று வரை ஒரு சிறு சமூகத்திலேயே புரோகிதம் நிலையாக இருப்பது இந்தியாவில் மட்டும் தான். வேறு எந்த நாட்டிலும் கிடையாது, வேறு எந்த மதத்திலும் கிடையாது. புரோகிதர்கள் வேறு வேறு சமூகங்களில் மாறி மாறி வருவார்கள். ஆனால் இங்கே புரோகிதம் ஒரு சிறு பிரிவுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. சுமேரியாவில் நெபுகத் நெசாத் என்ற மன்னர் சமூக ஒழுக்கத்தை கொடுக்கிறார். எகிப்தில் பாரோ சமூக ஒழுக்கத்தை வரையறுக்கிறார். வெளி நாடுகளில் மன்னர்கள் பொது ஒழுக்கங்களை தருகிறார்கள்; ஆனால் இந்தியாவில் மட்டும் தான் புரோகித கும்பல் ஒழுக்கங்களை கற்பிக்கிறது. ஸ்மிருதிகளை மன்னர்களா இயற்றினார்கள்? ஸ்மிருதிகளை இயற்றியது புரோகிதர்களான பிராமணர்கள். இந்த ஜாதியின் தோற்றத்தைப் பற்றி எந்த திராவிட இலக்கியம் கூறுகிறது? கிடையாது. இன்றைக்கும் ஜாதியை நியாயப்படுத்துவது எந்த மொழி இலக்கியம்? சமஸ்கிருதம் தானே? எனவே ஜாதியை தோற்றுவித்தது திராவிடர்களா? ஜாதி என்பது பிறப்பின் அடிப்படையில் வருவது. ஒருவன் முனைந்தாலும் அதை மாற்றமுடியாது இதை கூறுவதும், வலியுறுத்துவதும், நியாயப்படுத்துவதும் பிராமணிய இலக்கியங்கள்தான். இங்கிருக்கும் அத்தனை ஸ்மிருதிகளையும் கொடுத்தவர்கள் யார் ? அத்தனை ஸ்மிருதிகளுக்கும் ஆதாரம் தான் என்ன ? நான்கு வர்ணம்; அந்த நான்கையும் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் ஸ்மிருதிகள். இதில் பிராமண சதிகள் அம்பலப்பட்டுவிடுமே என்று எண்ணி இவற்றை 'கிருஷ்ணன்' என்ற 'சூத்திர சத்ரியன்' மூலமாக கூற வைத்தார்கள். கிருஷ்ணன், ஆடு மாடு மேய்த்துக்கொண்டிருந்தபோது அவன் சூத்திரன். மதுராபுரி ஆட்சியைக் கைப்பற்றியபோது அவன் சத்ரியன் ஆகின்றான். அந்த சத்ரியன் மூலமாக வர்ணத்தின் நியாயத்தை கூற வைக்கிறார்கள். மகாபாரதம், இராமாயணம் ஆகிய கதைகளின் மூலம் கூற வைத்தார்கள். ஆனால் ஸ்மிருதிகள் என்ற வரையரைகளை கொடுத்தவர்கள் பிராமணர்கள். இவற்றை வலுப்படுத்த தான், புராணங்கள் மற்றும் கீதை, இதிகாசங்களை படைத்தார்கள்.

இன்றைக்கும் திராவிடர்கள் வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு ஜாதி முறை தான் காரணம். உருவாக்கியவர்கள் திராவிடர்கள் அல்ல. புகுத்தியவர்கள் பிராமணர்கள். இதை நான் கூறவில்லை, வால்கா முதல் கங்கை வரை நூல் எழுதிய இராகுல சாங்கிருத்தியாயன், ரிக் வேத கால ஆரியர்கள் நூலில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார், 235 ஆவது பக்கத்தில், "பிராமணர்கள், இந்த நாட்டில் மக்கள் ஒன்றோடு ஒன்று ஒட்ட முடியாதவாறு பல சிறிய சிறிய ஜாதிகளாக பிரித்து வைத்து விட்டார்கள்" இதை அவர், துர்முகன், தர்மகீர்த்தி என்ற பிராமணர்கள் மூலமாகவே, ஜாதியை உருவாக்கியவர்கள் பிராமணர்கள் என்ற செய்தியை குறிப்பிடுகிறார். பல இடங்களில் இதுபோல குறிப்பிடுகிறார், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் மூலமாகவும் குறிப்பிடுகிறார். ஜாதியை உருவாக்கியவர்கள் ஆரியர்கள் என்பது பொதுவானது. அதிலும் குறிப்பாக கூறவேண்டுமானால் பிராமணர்கள். சூத்திரர்களின் மலிவான உழைப்பு சத்ரியர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. அதனால் பிராமண, சத்ரிய கூட்டுறவு ஏற்பட்டது. ஆனால், இராகுல சாங்கிருத்தியாயன் தனது 'வால்கா முதல் கங்கை வரை' கதையில் பழியை சத்ரியன் மேலே சுமத்துகிறார்.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 07.01.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கோவை மாவட்டக் கழக சார்பில் சிறப்புடன் நடந்தது

# பெரியார் தொண்டர் மேட்டுப்பாளையம் பா. ராமச்சந்திரன் 77ஆவது பிறந்த நாள் பாராட்டு விழா

பெரியார் பெருந் தொண்டர் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் மேட்டுப் பாளையம் பா.ராமச்சந்திரன் 77ஆவது பிறந்த நாள் பாராட்டு விழா, கோவை மாவட்டக் கழக சார்பில் ஜன. 4, 2021 மாலை 5 மணியளவில் மேட்டுப் பாளையம் ஈஸ்வரியம்மாள் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடை பெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை யில் நடந்த விழாவில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர் களும் பா.ராமச்சந்திரன் அவர்களின் உறுதியான பெரியார் கொள்கைப் பற்றையும் செயல்பாடுகளையும் பாராட்டி உரையாற்றினர். குட்டையூர் மா. கந்தசாமி, விழாவின் நோக்கத்தை யும், பா.ராமச்சந்திரனின் தீவிர செயல் பாடுகளையும் அவரோடு இணைந்து செயல்பட்ட நினைவுகளையும் விரிவாகப் பகிர்ந்து கொண்டார். மேட்டுப்பாளையத்தில், பா. ராமச் சந்திரன் முன்முயற்சி எடுத்து நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் உருவாக்கிய தாக்கத்தைப் பலரும் குறிப்பிட்டனர்.



ம.தி.மு.க. தணிக்கைக் குழு உறுப்பினரும், பவானி நதி நீர் மற்றும் சுற்றுச் சூழல் உரிமை செயல்பாட் டாளருமான டி.டி. ரங்கசாமி, பா. ராமச்சந்திரன் அவர்களுக்கும் தனக்கும் உள்ள நீண்டகால கொள்கை உறவுகளை நினைவு கூர்ந்தார். நூல்களைத் தேடித் தேடி வாங்கி படிப்பதில் பா. ராமச்சந்திரன் அவர்களுக்குள்ள ஆர்வத்தை சுட்டிக் காட்டிய அவர், அத்தகைய நூல்களை தனக்கு மட்டும் வாங்காமல், நண்பர் களுக்கும் சேர்த்து வழங்கும் பண்பைப் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.500 நன்கொடையை கழகத் தலைவரிடம் வழங்கினார். திராவிடர் கழக சார்பில் பேசிய வேலுச்சாமி, தன்னை கொள்கை ரீதியாக வளர்த்தெடுத்தவர் என்றும், களப் பணிகளில் இணைந்து செயல் பட்டதையும் வயது வேறுபாடின்றி இளைஞர்களோடு இணைந்து பணி யாற்றும் அவரது கொள்கைத் துடிப் பையும் மனம் திறந்து பாராட்டினார்.

மருத்துவர் மகேந்திரன், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார். மேட்டுப்பாளையத்தில் அவர் நடத்தும் மருத்துவமனையின் மேல் மாடியில் பொது மக்களுக்கான இலவச நூல் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். அறிவு வளர்ச்சியே மானுட வளர்ச்சி என்ற பெரியார் கொள்கை வழியில் தான் செயல்பட்டு வருவதை குறிப்பிட்ட மருத்துவர், மதங்கள் சிந்தனைகளுக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கின்றன என்றார். பெரியார் கொள்கையாளராக தனது தந்தையார் செயல்பட்டார் என்றும், கரூர் நகரில் பிரபலமான 'பெரியார் ஓட்டலை' நீண்டகாலம் நடத்தியவர் தனது தந்தை என்றும் குறிப்பிட்டார். தி.மு.க. காரமடை ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி. கல்யாண சுந்தரம், மேட்டுப்பாளையம் வழக்கறிஞர் முனுசாமி, தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சி.ஆர். ராமச் சந்திரன் மற்றும் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கழகப் பொறுப் பாளர்கள் யாழ் வெள்ளியங்கிரி, முகில் ராசு, ஈரோடு ரத்தினசாமி, சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் துரைசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் பாராட்டி உரையாற்றினர்.

விடுதலை இராசேந்திரன் தனது தலைமை உரையில், "திராவிடர் விடுதலைக் கழகத்தில் ஏராளமாக இளைஞர்கள் இருக்கிறார்கள். வயதில் மூத்த தலைவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே இருக் கிறார்கள். ஆனாலும் பெரியார் கொள்கைகள் இளமைத் துடிப்பும் புரட்சிகர உள்ளடக்கமும் கொண்டது என்பதால், 'தலைமுறை இடை வெளிகளைக்' கடந்து ஒரே இயக்கத் தில் ஒருமித்த உணர்வோடு பயணிக்க முடிகிறது. பெரியார் பெருந்தொண்டர் பா. ராமச்சந்திரன், 1962 முதலே பெரியார் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கொள்கைக் கோட்டையான தஞ்சை மாவட்டம், மன்னார்குடியைச் சார்ந்தவர். 1965ஆம் ஆண்டு பெரியாருடன் இளைஞராக அவர் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் இந்த மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது. தனக்கான அடையாளம் அதுதான் என்பதை அவர் பிரகடனப்படுத்தி இருக்கிறார். இயக்கத்தின் மூத்த முன்னோடிகள், கழகப் பேச்சாளர்கள் திருவாரூர் தங்கராசு, திருச்சி செல்வேந்திரன் போன்றவர்களோடு நெருங்கிப் பழகியவர். இயக்க முன்னோடிகளைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருப்பவர். அவ்வப்போது அலைபேசியில் என்னிடம் தொடர்பு கொண்டு இயக்கம் தொடர்பான வரலாற்றுத் தகவல்களையும் கழக முன்னோடிகள் குறித்தும் கருத்துகளை உணர்வு களுடன் பகிர்ந்து கொள்வார்.

பெரியார் தொண்டர்கள் வாழும் காலத்திலேயே இதுபோன்ற விழாக்களை நாம் நடத்த வேண்டும்; இதன் வழியாக இயக்க உணர்வுகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும்" என்று குறிப் பிட்டார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையில், "திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கப்பட்ட பிறகே பா. ராமச்சந்திரனிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இளைஞர் களோடு வயது வேறுபாடின்றி பழகி களப்பணியாற்றக் கூடியவர். இந்த அழைப்பிதழில் அவர் எடுத்துக் காட்டியுள்ள பெரியார் கருத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த இயக்கப் பணி செய்வ தால் இதில் விருதோ மதிப்போ கிடைக்காதென்று தெரியும். ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லோரையும் பகைத்துக் கொள்ள வேண்டி யிருக்கும். ஒவ்வொருவரிடமிருந் தும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரிடும் என்று தெரியும், தெரிந்தே தான் வந்தேன்.
– பெரியார்

எதிர்ப்புகளை எதிர்பார்த்துதான் இந்த இயக்கத்தில் தொண்டாற்ற முடியுமே தவிர, பாராட்டுகளை எதிர்பார்த்து அல்ல என்ற பெரியார் கருத்தை மிகச் சரியாக எடுத்துக் காட்டியிருக்கிறார்" என்றார்.

பா. ராமச்சந்திரன் ஏற்புரையில், "நான் பெரியார் இயக்கத்தின் சாதாரணமான கடைசித் தொண்டன்; இத்தகைய பாராட்டுகளுக்கு நான் தகுதியுடையவனா என்பது தெரிய வில்லை" என்று ஒரே நிமிடத்தில் தன்னடகத்துடன் கூறினார்.

நிகழ்வின் இறுதியில், பா. ராமச் சந்திரன் மகன் இங்கர்சால் நன்றி கூறினார். பா. ராமச்சந்திரன் மகள் தென்றல், M.A., D.Cop., - பார்த்தசாரதி இணையரும், மற்றொரு மகள் அறிவுக் கொடி, M.Sc., B.T.,- வெங்கடேஷ் இணையரும் பங்கேற்றனர்.

## வினா விடை

- அய்தராபாத்தில் 'பிராமணர்கள்' மட்டுமே பங்கேற்ற கிரிக்கெட் போட்டி, டிசம். 25, 26 தேதிகளில் பி.எஸ்.ஆர். மைதானத்தில் நடந்தது. **– செய்தி**

  பிராமணர்கள் மட்டுமே பங்கேற்கும் 'ஜல்லிக்கட்டு'வைப் பார்க்க ஆவலோடு காத்திருக்கிறோம், 'சுவாமி'!

- ஒரு இந்துவாக இருப்பவன், இந்தியாவுக்கு எதிராக இருக்கவே முடியாது. **– ஆர்.எஸ்.எஸ். தலைவர் பகவத்**

  ஆனால், சக இந்தியனுக்கு எதிராக இருக்கலாம்; எந்தத் தடையும் இல்லை.

- உ.பி.யில் முராத் நகரில் சுடுகாட்டுக்கு சடலத்தை எரிக்க வந்தவர்கள் மீது மயான சுடுகாடு கூரை விழுந்தது; 23 பேர் பலி. **– செய்தி**

  உ.பி. மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்த 83 குழந்தைகள் பிராண வாயு சிலிண்டர் இல்லாமல் இறப்பார்கள்; பிணத்தை எரியூட்ட வந்தவர்களே பிணமாவார்கள்; இதற்குப் பெயர்தான் 'இராமராஜ்யம்'.

- இரஷ்ய, அமெரிக்க ஜனாதிபதிகளைப்போல முதல் கொரானா தடுப்பு ஊசியை மோடி போட்டுக் கொள்ள வேண்டும். **– பீகார் காங். தலைவர் அஜீத்**

  அதெல்லாம் முடியாது சார்! முதல் தடுப்பு ஊசி ஸ்ரீமான் இராமச்சந்திர மூர்த்திக்குத் தான்! அது தான் இந்து 'தர்மம்'!

- அரசியலுக்கு பா.ஜ.க. இழுக்கும் கிரிக்கெட் வீரர் கங்குலிக்கு நெஞ்சு வலி. **– செய்தி**

  ரஜினியோடு இந்த விளையாட்டை நிறுத்த மாட்டாங்க போலிருக்கே...

### நன்கொடை

மேட்டுப்பாளையம் நிகழ்வு களில் பா. ராமச்சந்திரன், 77 ஆவது பிறந்த நாள் விழாவில் அவரது மகள் தென்றல்-பார்த்தசாரதி சார்பில் ஆயிரமும், மற்றொரு மகள் அறிவுக் கொடி-வெங்கடேஷ் இணையர் சார்பில் ஆயிரமும் பாராட்டுரை வழங்கிய டி.டி. ரங்கசாமி (ம.தி.மு.க.) ரூ.500-ம் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு நன்கொடையாக வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th January 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN